


January 2021 Issue 1 Editor ; VM Thevarajan

## இன்றைய சிந்தனை

ஒரு மூதாட்டி ஒரு இறைச்சி கடைக்கு வந்தார். அவர் வந்த நேரம் கடையை மூடும் நேரம். கோழி இருக்குதா? என்று கேட்டார். கடைக்காரர் பிறிஜ் ஐ திறந்து பார்த்தார். ஒரே ஒரு கோழி மட்டும் இருந்தது. அதை எடுத்து தராசிலை வைத்தார். ஒண்ணரை கிலோ காட்டியது. அந்த மூதாட்டி கோழியைப் பாத்தார். தராசைப் பாத்தார். கடைக்காரரை பார்த்து இதை விட பெரிய கோழி இருக்குதா என்று கேட்டார். கடைக்காரர் தன்னிடமிருந்த ஒரே ஒரு கோழியை பிறிஜ்ஜுக்குள் கொண்டு போய் வைத்தார். பின் அதே கோழியை வெளியே எடுத்து தராசு மேல் வைத்து மெதுவாக தன் பெரு விரலை வைத்து அழுத்தினார். இப்போது தராசு இரண்டு கிலோ காட்டியது. உடனே அந்த மூதாட்டி ரொம்ப நல்லது இரண்டு கோழியையும் எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அந்த கடைக்காரருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் தலையை பிரிஜ்ஜுக்குள்ளே விட்டு இல்லாத கோழியைத் தேடினார்.

அந்த கடைக்காரர் நிலைமையில் நீங்கள் இருந்தீர்களாயின் எப்படி இருந்திருக்கும்.? நீங்கள் சொன்ன ஒரு பொய்யுக்கு முன்னால் நீங்கள் இவ்வளவு நாள் சம்பாதித்து வைத்த நேர்மைக்கு இடமே இல்லாமல் போயிருக்கும்.

நாம் இப்படியான ஒரு சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். உண்மையைச் சொல்லவா பொய் சொல்லவா என்று தவிக்கிற நேரத்திலே உண்மையைச் சொல்லிவிடுங்கள். அது எப்பவுமே உங்களைக் காப்பாற்றும். எப்போதும் உண்மையைச் சொன்னால் மனசு free ஆக இருக்கும். அடுத்தவர்கள் எங்களை பாராட்டணும், என்னைப் பற்றி நல்லா நினைக்கவேண்டும் என்பதற்காக ஒரு போதும் பொய் சொல்லாதீர்கள். உங்கள் நடத்தையையே அது பாதித்துவிடும். திரளான ஐஸ்வரியத்தைப் பார்க்கிலும் கீர்த்தியே மேலானது. உண்மையான கடவுளை வழிபடுகிற நாம் பொய் சொன்னால், அது நமக்கு மட்டும் கெட்ட பெயரில்லை. எம் கடவுளையே அவதூறு பண்ணுவதாகிவிடும். அதனால், எந்த காரணத்துக்காகவும் பொய் சொல்லாமல் நேர்மையானவர்களாய் இருப்போம்.

## அழகு தமிழ்

ஒரு தேனீர் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம், தேனீரை விடவும் சூடாக இருந்தது.

"இரு வடை எடுத்து ஒருவடை என்பார்
திருவோடு ஏந்தி தெருவோடு போவார்"

கடைக்காரர் தேனீர் போடுகிற நேரத்தில் தட்டிலிருக்கும் வடையில் இரண்டை கபளீகரம் செய்து விட்டு ஒரு வடை தான் என்று காசு கொடுப்பவர்களை கண்டிப்பதற்காக எழுதப்பட்ட வாசகம் இது. சுவாரஸ்யமாக இருக்கிறது என்றாலும் வடை எடுக்கிற எல்லோருக்கும் இது சங்கடத்தையே ஏற்படுத்தும். இதைப் படிக்கும் போது உங்களுக்குள் ஏற்படும் மன உணர்விற்கும் இனி வரும் வரிகளை படிக்கும்போது ஏற்படும் மன உணர்விற்கும் உள்ள வித்தியாசத்தினை கவனியுங்கள்.

ஒரு ஓட்டோவில் சாரதியின் சீற்றின் முதுகில் எழுதப்பட்ட வாசகம்:-

"உங்களின் வழிச் செலவு, எங்களின் வாழ்க்கைச் செலவு"

இந்த வாசகம். இறங்கிய பின் யாரையும் பேரம் பேச விடாது. மீற்றருக்கு மேல் ஐந்து ரூபாய் போட்டுக்குடுங்க சார் என்கிற வார்த்தைக்கும் இந்த வார்த்தைக்கும் எத்தனை வேறுபாடு. அதனால் தான் சொல்பவற்றை சொல்லும் விதத்தில் சொன்னால் வெல்லலாம்.

ஒரு மொத்த விற்பனை மீன் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம் :

"மீன் சாப்பிட வேண்டாம் என்று நினைத்தேன் மீனவன் சாப்பிட வேண்டாமா?"

வார்த்தைகளில் இல்லை வெற்றி. அது வெளிவரும் விதத்தில் தான் இருக்கிறது வெற்றி. தேனீர் கடையின் வரிகளும் ஒற்றோவில் எழுதப்பட்ட வரிகளும் ஒரே விஷயத்தைத் தான் சொல்கிறது. ஆனால் சொல்லப்பட்ட விதம் தான் அதில் வித்தியாசம். சொல்ல வந்ததை அழகாக சொல்வது ஒரு கலை. நினைக்கும் விஷயங்களை எல்லாம் பேசாமல், அதை செம்மைப் படுத்தி பேசிப் பாருங்கள். வெற்றி நிச்சயம்.

ஒரு ஹோட்டலில் எழுதி மாட்டி இருக்கும் வாசகம் … "வீட்டு சமையலுக்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள்".

எண்ணங்கள் அழகானால் வார்த்தைகள் அழகாகும். வார்த்தைகள் அழகானால் சிந்தனைகள் அழகாகும். சிந்தனைகள் அழகானால் வாழ்க்கையே அழகாகும்




## பெயரில் என்ன இருக்கு?

ஒரு கோழிக் குஞ்சு தன் தாய் கோழியைப் பார்த்துக் கேட்டது "ஏனம்மா இந்த மனிதர்களுக் கெல்லாம் ஒரு பெயர் இருக்கிறது. ஆனால் எமக்கு மட்டும் கோழி என்ற ஒரே பெயர்?"

அதற்கு தாய்க் கோழி "மனிதர்களுக்கு பல பெயர்கள் உள்ளன, ஆனால் அவன் செத்த பிறகு அவனுக்கு ஒரே பெயர் "பிணம்". ஆனால் நாம் செத்த பிறகு எமக்கு பல பெயர்கள்:

சிக்கன் 65
சிக்கன் புலாவ்
சிக்கன் வறுவல்
சிக்கன் தந்தூரி
கார்லிக் சிக்கன்
ஜின்ஜர் சிக்கன்
பெப்பர் சிக்கன்
இன்னும் பல..........

பெயர், படிப்பு, பதவி, முக்கியமல்ல....
செயல்பாடு, பயன்பாடு இவைதான்
வாழ்வில் முக்கியம்.






## அன்னமும் பாலும் !

அன்னம் பாலையும் தண்ணீரையும் பிரிக்கும் என்பது நமக்குப் பள்ளிக் கூடத்திலே சொல்லிக் கொடுத்த விடயம். ஏதோ அன்னப் பறவை என்று ஒன்று அந்தக் காலத்தில் இருந்ததாகவும் அது தண்ணீர் கலந்த பாலை வைத்தால் தண்ணீரைப் பிரித்து அப்படியே பாலை மட்டும் உறிஞ்சிவிடும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் மிருகக் காட்சி சாலைகளில் அன்னப் பறவையைப் பார்த்தேன். அவற்றைப் பராமரிப்பவரிடம் இந்த அன்னத்துக்கு பால் வைக்கிறீர்களா என்று கேட்டபோது அவர் கிண்டலாகச் சிரித்தார். அன்னம் நீரில் உள்ள மீன்களையும் புழு பூச்சிகளையும் தின்று வசிக்கும் உயிரினம் என்றும் பாலைச் சாப்பிடாது என்றும் தெரிவித்தார்.

நம் முன்னோர்கள் தப்பாவா சொல்லியிருப்பார்கள் என்று சில நாட்கள் இதைப் பற்றியே சிந்தித்தேன்.

ஒரு நாள் சாப்பிடும்போது தோன்றியது அடடா அன்னம் என்பதற்கு அரிசி சாதம் என்றும் பொருள் உண்டே. இதை நாம் சிந்தித்ததில்லையே என்று யோசித்தேன். பிறகு கொஞ்சம் சுடு சோறு கொண்டு வரச் சொல்லி அதில் கொஞ்சம் பாலை ஊற்றினேன். அப்படியே வைத்துவிட்டு 5 நிமிடம் கழித்துப் பார்த்த போது என்ன ஆச்சரியம் !

பால் முழுவதையும் சாதம் உறிஞ்சிக் கொண்டிருந்தது. தெளிந்த நீர் மட்டும் சாதத்தைச் சுற்றியிருந்த இடத்தில் வடிந்திருந்தது. உண்மையில் நான் கலந்த நீரை விட அதிகமாகவே வடிந்திருந்தது. சரி நாம் உபயோகித்த பாலில் ஏற்கனவே எவ்வளவு தண்ணீர் இருந்ததோ என்று நினைத்தேன்.

இது தான் அன்னம் பாலையும் தண்ணீரையும் பிரிக்கும் கதை. நீங்கள் யார் வேண்டுமானாலும் உங்கள் வீட்டிலேயே செய்து பார்க்கலாம். மறுபடி சிந்தித்தபோது தான் அடடா அன்னம் என்று தான் சொன்னார்களே தவிர அன்னப்பறவை என்று ஒரு இடத்திலும் சொல்லவில்லை. அது நாமாக செய்து கொண்ட கற்பனைதான் என்று புலனாயிற்று. அன்னம் பாலையும் தண்ணீரையும் இப்படித்தான் பிரிக்கும் என்று தெரிந்து கொண்டேன்.

## துரோகம்

*துரோகம் என்பது மிருகங்களிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை, ஆனால் மனித உருவத்தில் அலையும் பெரும்பாலான மிருகங்களிடம் இருக்கத்தான் செய்கிறது*

# எங்கே மகிழ்ச்சி ?

ஒரு அழகான பணக்காரப் பெண் மன நோய் மருத்துவரிடம் சென்றார். அவரிடம் தனக்கு மனச் சோர்வு நோய் (depression) இருப்பதாகக் கூறுகிறார். தன் வாழ்வே அர்த்தமற்றதாகிவிட்டது என்று மனம் நொந்து வெளியிட்டார். இதைக் கேட்ட மருத்துவர் தன் வீட்டுக்குள்ளிருந்து அச் சிகிச்சை நிலையத்தை சுத்தம் செய்யும் பணிப் பெண்ணான ஒரு வயது முதிர்ந்த பாட்டியைக் கூப்பிட்டு "மேரி உன் கதையை இவருக்கு சொல்லு. இவர், தான் வாழ்வதில் அர்த்தமில்லை என்று எண்ணுகிறார்" என்றார். மேரி தான் பெருக்கிக் கொண்டிருந்த துடைப்பத்தை வாசலுக்கு வெளியில் வைத்துவிட்டு தன் கதையை சொல்ல தொடங்கினார்.

"எனக்கு 28 வயதாக இருக்கும்போதே என் கணவர் புற்று நோயால் இறந்து விட்டார். அதன் பின் சில வாரங்களிலேயே என் ஒரே மகன் ஒரு வாகன விபத்தில் இறந்துவிட்டான். நான் தனி மரமானேன். நான் இனியும் எதற்காக வாழவேண்டும் என்று எண்ணினேன். என்னால் இரவில் தூஙக முடியவில்லை. சிரிப்பதையோ புன்முறுவல் செய்வதையோ நிறுத்திக் கொண்டேன்.

ஒரு நாள் மாலை வேளை, வழமைபோல் வேலைத் தலத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். நான் வீட்டுக்குள் நுழைந்து கதவை மூட முனைந்த போது ஒரு சிறு பூனைக் குட்டி குளிரில் நடுங்கியபடி இருப்பதைப் பார்த்தேன். அந்தப் பூனை வீதியிலிருந்தே என்னைப் பின்தொடர்ந்து வந்திருக்க வேண்டும். அது பலயீனமாக பசியுடன் இருப்பதாகவும் தோன்றியது. அந்த பிராணிக்கு அன்றிரவு என் வீட்டில் தங்குமிட வசதி செய்து கொடுக்க தீர்மானித்தேன். அப் பூனையை வீட்டிற்குள் தூக்கி வந்து ஒரு கோப்பையில் பால் ஊற்றிக் கொடுத்தேன். அந்த பாலை அது குடிந்த வேகத்தில் அது எவ்வளவு பசியில் இருந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன். அது பாலைக் குடித்து முடித்தவுடன் தன் உடலை என் கால்களில் உரசிதன் நன்றியைத் தெரிவித்தது. அதைப் பார்த்து பல மாதங்களின் பின் அன்று தான் நான் மகிழ்ச்சியில் புன்னகைத்தேன். அன்று ஒரு விடயத்தை நான் உணர்ந்து கொண்டேன். என்னையே கேட்டுக் கொண்டேன் "ஒரு பூனைக்கு உதவியதால் இத்தனை மகிழ்ச்சியை உணர்ந்தேன் என்றால், மேலும் பலருக்கு உதவினால் எப்படி உணர்வேன்?" என்று. அடுத்த நாள் வீட்டிலே 'சான்விச்' செய்து,. அதை அடுத்த வீட்டு பாட்டியிடம் கொண்டு போய் கொடுத்தேன். அவர் தனியே வசித்து வரும் 78 வயதுடையவர் என்பது எனக்கு தெரியும். அன்று அவர் சுகயீனம் காரணமாக சமைக்க முடியாததால் எதுவும் உண்ணவில்லை. நான் கொண்டு போன உணவை ஆவலுடன் உண்டுவிட்டு இதயபூர்வமாக நன்றி கூறினார். இது என்னை மகிழ்ச்சிப் படுத்தியது. அன்றிலிருந்து ஒவ்வொருநாளும் பிறருக்கு ஏதும் ஒரு நன்மையான காரியத்தை செய்ய தொடங்கினேன. அன்பு காட்ட கிடைக்கும் சந்தர்ப்பத்தை நான் என்றும் தவறவிட்டதில்லை.

இப்படியாக நான் என் வாழ்வில் தொலைத்த மகிழ்சியைத் தேடிக்கொண்டேன். என் தூக்கமின்மை சில நாட்களிலேயே மறைந்துவிட்டது. என்றுமில்லாதவாறு அமைதியான தூக்கம் கிடைத்தது. நான் உதவியவர்களின் முகத்தில் பார்த்த மகிழ்ச்சி என்னை மேலே மேலே அதே வழியில் செல்ல ஊக்கம் கொடுத்தது.

அந்தப் பணக்கார பெண் மேரியின் முழுக்கதையையும் கேட்டுவிட்டு சொன்னார் "உங்கள் கதையை என்னுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி. என்னிடம் எதையும் வாங்க பணம் உண்டு. ஆனால் நான் பணத்தால் வாங்கக் கூடியயவற்றை எல்லாம் இழந்துவிட்டேன். உன் கதை என் கண்ணை திறந்துவிட்டது. என்னால் பணத்தால் மகிழ்ச்சியை வாங்க இயலாது. ஆனால் மகிழ்ச்சியினால் மகிழ்ச்சியை வாங்க முடியும். மற்றவர்களை மகிழ்சிப்படுத்த முடியுமென்றால் நாமும் மகிழ்சியாக இருக்க முடியும். இது தான் உண்மை. மகிழ்ச்சியின் அழகு அதைப் பகிர்தலிலேயே உள்ளது. நீ எவ்வளவு அதிகமாக பகிர்கிறாயோ அதற்கேற்ப உன் மகிழ்சியும் அதிகமாகும். மகிழ்ச்சி என்பது விதிப்படி வருவதல்ல. அது ஒரு பயணம். அந்தப் பயணத்திலே அதிகமானவர்களை கூட்டிச் சென்றால் அது மகிழ்ச்சியை மேலும் பல மடங்கு அதிகரிக்கும். எனவே மகிழ்சியைப் பெறுவதற்கு மகிழ்ச்சியை பரப்புங்கள்.

## ரீச்சரை தெரிந்தால் சொல்லுங்கள் !

ஒரு கனவன் தன் மனைவியிடம் 250 டாலர்கள் கடன் வாங்கினான். கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் இன்னுமொரு 250 டாலர்கள் கடன் வாங்கினான். சில நாட்கள் சென்ற பின் கணவனின் மனிபர்சில் பணம் இருப்பதைப் பார்த்த மனைவி தான் கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்டாள். மனைவியிடம் நான் உனக்கு எவ்வளவு பணம் தர வேண்டும் என்று யதார்த்தமாகக் கேட்டான். மனைவி சொன்னாள் 4100 டாலர்கள் தரவேண்டுமென்று. குழம்பிப் போன கணவன் எப்படி அவ்வளவு தொகை வந்தது என்று கேட்டான். அதற்கு மனைவி ஒரு பேப்பரில் கணக்கைப் போட்டுக் காட்டினாள். இதோ அந்த கணக்கு வழிமுறை:::

முதல் வாங்கியது - **$ 2 5 0**
இரண்டாவதாக வாங்கியது - **$ 2 5 0**
--------------
**$ 4 10 0**
==========

ஆக மொத்தம் 4100 டாலர்கள்.

கணவன் இன்று வரை தேடி அலைகிறான்......
தன் மனைவிக்கு கனணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ரீச்சரையும் மனைவி படித்த பள்ளிக் கூடம் எது என்பதையும்.

### *Advice !*

**As the NEW Year starts, I urge you to take care of yourself and avoid accidents because spare parts for old models like you and I are no longer in stock. Forward to other old models you care.**

# சினம் காக்க !

செல்லப் பிராணிகளை வளர்க்கிறதில் பிரியமாய் இருக்கிற இறை பக்தி கொண்ட ஒருவர் அதே போல் வேட்டைக்கு போவதிலும் நாட்டமானவர். அவர் ஒரு வனப் பகுதியிலே அழகான வீட்டைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் வேட்டைக்கு போவதையும் வழக்கமாக கொண்டுள்ளார். அப்படி ஒரு தடவை வேட்டைக்கு போனபோது அழகான ஒரு மான் அவர் கண்ணில் பட்டது. அந்த மானை பிடித்து வீட்டுக்கு கொண்டு வந்து வளர்த்து வருகிறார். அது துள்ளிக்குதித்து விளையாடுவதையெல்லாம் பார்த்து மகிழ்கிறார்.

ஒரு நாள் காலை எழுந்தவுடன் வழக்கமாக பார்க்கும் மானைக் காணவில்லை. எங்குமே தேடியும் காணவில்லை. எப்படி இந்த மான் மாயமாகியது? தவித்துப் போய் கடவுளை வேண்டுகிறார். அப்போது கடவுள் அவருக்கிரங்கி காட்சி தருகிறார். கடவுள் “பக்தா உன் பக்தியை மெச்சினோம், உனக்கு என்ன வேணும் கேள்” என்றார். நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ தூக்கிப் போய்விட்டார்கள். அதை எப்படியும் எனக்கு தேடிக் கொடுங்கள் என்று கடவுளைக் கேட்டார். அத்தோடு அவருக்கு இருந்த கோபத்தில் என் மானைத் திருடியவனையும் என் முன்னால் நிறுத்து அவனை அடித்து என் கோபத்தை தீர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். கேட்டதைக் கொடுக்க வந்த கடவுள் அதைக் கொடுக்க முடியாமல் தயங்கி நிற்கிறார். அவர் தன் பக்தனிடம் சொன்னார் “உன் மான் காணாமல் போச்சு அதை தருகிறேன். அதை யார் எடுத்திருந்தால் உனக்கென்ன? மான் உனக்கு வந்திடும் அது போதுமா? என்று கேட்கிறார். அதற்கு அவன் “நான் ஆசையாய் வளர்த்த மானை அபகரித்தவனை பழி வாங்கவேண்டும்” என்றார். அப்போ கடவுள் “சரி உன் மானை அபகரித்தவன் உன் பின்னால் தான் நிற்கிறான் என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார். இவன் “யாரடா என் மானை கொண்டு சென்றவன்” என்று சொல்லிக் கொண்டு திரும்பிப் பார்த்தால் அங்கே ஒரு சிங்கம் நிற்கிறது. அதைக்கண்டவுடன் அவனுக்கு பயத்தால் உடல் எல்லாம் நடுங்கியது. கடவுளே என்னைக் காப்பாற்று என்று வேண்டிக்கொண்டு திரும்பிப் பார்த்தான். கடவுள் அவனுக்கு வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். ஒரு கணத்திலே அந்தச் சிங்கம் அவனை அடித்துக் கொன்று சாப்பிட்டு விட்டது..

தன்னைத் தான் காக்கின் சினம் காக்க, காவாக்கால் தன்னையே கொல்லும் சினம் என்று திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். மானை அபகரித்தவனை பழிவாங்க வேண்டுமென்ற அந்தச் சினம் அவனையே கொன்றுவிட்டது. இதே போன்று நம் வாழ்விலும் கோபத்தில் நாம் என்ன செய்கிறோம் என்று யோசிக்காமலே செயல்பட்டு நம்மையே அழித்து விடுகிறோம். சினம் தாழ்த்தி குணம் உயர்த்தி நிம்மதியாய், அமைதியாய், ஆரோக்கியமாய், பொறுமையாய் வாழ்ந்துதான் பார்ப்போமே.

# பெண்களின் ஆழ்மனதில்......

இரண்டு அரசர்கள் போர் புரிந்தார்கள். தோற்றுப் போனவரை கொல்ல வேண்டிய அரசர் சொன்னார் “உன்னைக் கொல்லாமல் விடுகிறேன் எனக்கு ஒரு விஷயம் தேவைப்படுகிறது. நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைத் திருமணம் செய்ய வேண்டுமென்றால், அவள் சொல்லுகிறாள் ஒவ்வொரு பெண்ணும் தன் ஆழ் மனகில் என்ன நினைக்கிறாள் என்பதை சொல்ல வேண்டும் என்று. “இதை நீ கண்டுபிடித்து சொல்லிவிட்டால் உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன்” என்றார்.

அந்த தோற்றுப் போன அரசன் எங்கும் தேடி கடைசியில் அவருக்கொரு தகவல் கிடைக்கிறது ‘ஒரு சூனியக்கார கிழவி இருக்கிறாள் அவளுக்கு எல்லா விஷயங்களும் தெரியும்’ என்று. அந்தச் சூனியக்காரக் கிழவியிடம் போய் இந்த அரசர் கேட்கிறார் “ஒவ்வொரு பெண்ணின் ஆழ் மனதிலும் என்ன இருக்கிறது?” என்று. அவள் சொல்கிறாள் “நான் பதில் தருகிறேன் ஆனால் அதில் ஓர் சிக்கல். இதை சொல்வதால் உனக்கு லாபம், அந்த அரசனுக்கும் திருமணம் நடக்கும். இதில் எனக்கு என்ன லாபம்? என்று கேட்டாள். அந்த அரசனும் அவசரத்தில் சொல்லுகிறான் “நீ என்ன கேட்கிறாயோ அதைத் தருகிறேன்” என்று.

அவள் பதிலைச் சொன்னாள் “ஒவ்வொரு பெண்ணும் தன் ஆழ் மனதில் என்ன நினைக்கிறாள் தெரியுமா? தன் சம்மந்தப்பட்ட எல்லா முடிவுகளையும் தானே எடுக்க வேண்டுமென்று பெண் ஆசைப்படுகிறாள். தன் சம்மந்தப்பட்ட முடிவுகளை இன்னொருவர் எடுப்பதை பெண் விரும்புவதில்லை. தானே முடிவெடுக்க வேண்டுமென்று அவள் நினைக்கிறாள். இது தான் ஆழ் மனதில் பெண் நினைக்கும் நினைப்பு.” அந்த ராஜா போய் இந்த பதிலை அடுத்த அரசரிடம் சொல்ல அவர் காதலியிடம் சொல்ல அவளும் மாலையிட்டு மணம் முடிந்துவிடுகிறது.

உயிர் தப்பிய அரசன் சூனியக்காரக் கிழவியிடம் போய் “உன் பதில் சரியென்று ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இப்போது நீ விரும்பியதை என்னிடம் கேள்” என்றார். அவள் “நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்” என்றாள். ஒரு வினாடி அதிர்ச்சி அடைந்த அரசன் “நான் வாக்குக் கொடுத்தது கொடுத்தது தான். சரி எப்போ திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்? என்று கேட்டான். “நாளை காலை பத்து மணிக்கு மாலையோடு வா” என்றாள் கிழவி. அவனும் அடுத்த நாள் பத்து மணிக்கு மாலையோடு போனபோது அங்கு ஒரு தேவதை போன்ற இளம் பெண் உட்கார்ந்திருப்பதைக் காண்கிறான். இங்கே இருந்த கிழவி எங்கே? என்று கேட்கிறான். அவள் “அது நான்தான்” என்றாள். அரசன் “பயங்கரமான உருவத்துடன் சூனியக்கார

(கொடர்ச்சி 5ம் பக்கம்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிழவியாக இருந்தாயே?" "என்னால் எப்படி வேண்டுமானாலும் உரு மாற முடியும். உனக்கு ஒரு போட்டி இப்போது. உன்னோடு வெளியில் வரும்போதெல்லாம் இப்படி தேவதையாக நான் வருவதாக இருந்தால் தனியாக உன்னுடன் இருக்கும் போதெல்லாம் சூனியக்காரக் கிழவியாக இருப்பேன். நீ வெளியில் வருகிற போது சூனியக்காரக் கிழவியாக வருவதற்கு என்னை அனுமதித்து விட்டால் அந்தரங்கமாக இருக்கும் போது இளம் பெண்ணாக தேவதை போல் இருப்பேன். இப்போ சொல்லு நான் எப்படி இருக்க வேண்டும்". அவன் ஒரு வினாடி தானும் யோசிக்காமல் சொன்னான் "இது உன் பிரச்சினை முடிவெடுக்க வேண்டியது உன் வேலை. நீ என்ன முடிவெடுக்கிறாயோ அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான். அந்த தேவதை சொன்னாள் "எப்போது என்னிடம் முடிவை விட்டு விட்டாயோ அப்போதே நான் இனிமேல் எப்போதும் தேவதையாகவே இருப்பதாக தீர்மானித்து விட்டேன்" என்றாள். ஒரு பெண் தானே முடிவெடுக்கிற அதிகாரத்தைப் பெறுகிறபோது தேவதையாகிறாள். முடிவு அவள் மீது திணிக்கப்படுகிற போது அவள் சூனியக் காரக் கிழவியாகிறாள். இப்போது இந்த வீடுகளில் சூனியக்காரக் கிழவிகள் நிரம்பியிருப்பதற்கான காரணம் என்ன என்று புரிகிறதா?

## *Money is very funny !*

How interesting... I never thought that Money has different names !!

In temple or church it is called donation.
In School it is fee.
In marriage it is called dowry.
In divorce almony.
When you owe someone it is debt.
When you pay the Govt. it's tax.
In Courts it is fine.
Civil Servant retirees it is pension.
Employer to worker, it is salary.
To children it's allowance.
When you borrow from Bank, it is loan.
When you offer after a good service it's tips.
To kidnappers it is ransom.
Illegally received in the name of service, it is a bribe.

The question is, when a husband gives to his wife, what do we call it?

ANSWER : Money given to your wife is called DUTY and every man has to do his duty because wives are not DUTY FREE.

## பெண்ணின் பெருந்தக்க யாவுள?

புதுசா கல்யாணமான கணவன் மனைவி இடையே ஒரு ஒப்பந்தம் ! இன்று ஒரு நாள் மட்டும் "யார் வந்தாலும் கதவை திறக்கக் கூடாது என்று முடிவெடுத்தனர். அன்றே அவனுடைய அம்மா அப்பா வந்தனர்…! இருவரும் அவர்கள் வருவதை ஜன்னல் வழியாக பார்த்துவிட்டனர். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கணவனுக்கு கதவை திறக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் ஒப்பந்தம் போட்டுவிட்டதால் அதை மீற மனமின்றி கதவை திறக்கவில்லை அவன். அவன் பெற்றோரும் வீட்டில் யாரும் இல்லை என்று நினைத்துக் கொண்டு திரும்பிப் போய்விட்டனர். கொஞ்ச நேரம் கழித்து மனைவியின் பெற்றோர் வந்தனர். கதவை தட்டினார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..! ஆனால் மனைவிக்கு கண்கள் கண்ணீரால் குளமானது. "என்னால் கதவை திறக்காமல் இருக்க முடியாது" என்று சொல்லி அவள் கதவை திறந்தாள். ஆனால் கணவன் ஒன்றும் சொல்லவில்லை.

வருஷங்கள் உருண்டோடின ! இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தன. மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பிறந்த சந்தோஷத்தில் பெரிய அளவில் செலவு செய்து நண்பர்கள் அனைவருக்கும் பார்ட்டி கொடுத்து கொண்டாடினான். அப்போது மனைவி "இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்த போது இவ்வளவு பெரிய அளவில் கொண்டாடவில்லை பெண் குழந்தை பிறந்தவுடன் இவ்வளவு பெரிய பார்ட்டி கொடுக்கிறீங்களே ஏன்?" என்று கேட்டாள். அதற்கு கணவன் நிதானமாக சொன்னான் "எதிர் காலத்தில் எனக்காக கதவை திறக்க ஒரு பெண் பிறந்து விட்டாள்" என்றான் கர்வத்துடன்.
பெண் பிள்ளைகள் பெற்ற அனைவருக்கும் சமர்ப்பணம்.

சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் பதிவு..

சித்திரகுப்தரே! பூலோகம் சென்று வந்தீரே அங்கு என்ன விஷேசம்.
மகாராசா ! அங்கு எல்லோரும் முகத்திற்கு ஒருவகை கவசம் அணித்திருப்பதால் எனக்கு ஆட்களை அடையாளம் காண முடியாமல் போய் விட்டது. ஆதலால் முகக் கவசம் அணியாதோர் சிலரைத் தான் இங்கு என்னால் கொண்டு வர முடிந்தது.



## பிரச்சினைகள் தீர வழி !

கணவனுக்கு வீட்டில் காப்பி ஊற்றிக் கொடுத்தாள் மனைவி... உள்ளே ஓர் எறும்பு கிடந்தது. அதைக்கண்ட கணவன் காப்பியை விடக் கொதிக்க ஆரம்பித்து விட்டான். காப்பியை வீசினான்... விளைவு? சண்டை....! சந்தோசமானவீடு மூன்று நாள் துக்கவீடாக மாறிவிட்டது...

இதே சம்பவம் இன்னொரு வீட்டிலும் நடந்தது. அந்த வீட்டில் உள்ள கணவன் காப்பியில் செத்து மிதக்கும் எறும்பை எடுத்தான். அவன் மனைவியை அழைத்து மெதுவாகச் சொன்னான். உன் காப்பிக்கு என்னை விடவும் தீவிர ரசிகன் இந்த எறும்புதான். உன் காப்பிக்காக உயிரையே கொடுத்து விட்டது பார். இது போல் ரசிகர்களை வீணாய் இழந்து விடாதே ,மனைவி சிரித்தாள். தன் தவறை உணர்ந்தாள். அதன்பிறகு, அவர்கள் வீட்டு சர்க்கரையை கவனமாகப் பாதுகாத்தாள். அதனால் காப்பியில் எறும்பும் சாகவில்லை. அவர்கள் வீட்டின் மகிழ்ச்சியும் சாகவில்லை..

வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்வதும் சங்கடத்தில் முடிப்பதும் நாம் பிரச்சினைகளை எவ்வாறு கையாள்கின்றோம் என்பது மட்டுமே தீர்மானிக்கிறது. நமக்கு மட்டும் தான் கோபம் வரும் எனவும்; நாம் தவறே செய்யமாட்டோம் எனவும் நாம் நினைக்கக் கூடாது.. தவறுகளை நகைச்சுவையாகவோ, அன்பாகவோ சொல்லிப்பாருங்கள்.. அந்தத் தவறு மறுபடிம் நடக்காது... ஆனால், காட்டுக்கத்தல் கத்தியோ, அதிகாரமாகவோ தவறுகளை சுட்டிக் காட்டினீர்கள் என்றால்; அதை விட அதிகமான தவறுகள் நடக்கும் என்பதை மறவாதீர்கள்..!

சாவியைப் பார்த்து சுத்தியல் கேட்டது. "உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும், ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். ஆனால், நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே..! அதெப்படி..? அதற்கு சாவி,நீ என்னை விட பலசாலிதான். அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய்.. ஆனால், நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன் என்றதாம்..!

பொறுமையைவிட மேலான தவமுமில்லை. திருப்தியை விட மேலான இன்பமுமில்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை..!

தோல்விகள் சூழ்ந்தாலும். இருளை அகற்றும் கதிரவன் போல அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வையுங்கள். முடியும் வரை அல்ல; உங்கள் இலக்கினை அடையும் வரை..!

## அப்பா !

அப்பா நீங்கள் கவிதையல்ல உரைநடை. வர்ணிப்புக்கானவர் அல்ல, வாழ்க்கையின் யதார்த்தம். அச்சாணியை யாரும் அள்ளி முத்தமிடுவதில்லை. நீங்கள் அச்சாணி. உங்கள் உருவம் கூர்மையான ஆயுதம். ஆனாலும் நீங்களே அந்த ஓட்டத்தின் ஆதாரம். உங்கள் கரிசனம் எல்லாம் கண்டிப்பு என்று தோன்றியது. உங்கள் சொற்கள் எல்லாம் முட்களாய் தெரிந்தது. கேட்டதை யெல்லாம் வாங்கித் தராத அப்பா. என்கிற குறை இருந்தது. "எங்கே போனாலும் நேரம் பார்த்துக் கட்டுப்படுத்திய அப்பா" என்ற எரிச்சல் இருந்தது. எதைச் செய்தாலும் நேர்த்தி எதிர்பார்த்த அப்பா" என்ற வருத்தம் இருந்தது. அப்பா உங்களைப் பற்றி நினைத்த அத்தனையும் தப்பப்பா.!

நான் நாற்பதைத் தொடும்போது தான் ஞானம் பிறக்கிறது. உங்கள் ஞாபகம் நெஞ்சை நனைக்கிறது ஒவ்வொரு வீடும் அப்பாவைப் பெரும்பாலும் தப்பாகவே புரிந்து கொள்கிறது. தாய் மடி, அத்தை மடி, காதலி மடி, மனைவி மடி என்று தேடிப் போய் தலை சாய்த்த உலகம் தந்தை மடியின் சுகம் அறிந்ததில்லை. தவறு செய்தபோது அடிக்காமல், திட்டாமல் மௌன விரதம் இருந்து தண்டித்தவர் நீங்கள். வாய் வரை வந்த பொய்கள் உங்கள் கண்களைப் பார்த்ததும் எச்சிலோடு கரைந்து விடும். "என் பிள்ளை என்னை விட உயர வேண்டும்" என்று சளைக்காமல் களைக்காமல் உழைத்தவர் நீங்கள். அலுவல் முடிந்து அழுக்காய் தான் நுழைவீர்கள். ஆனால் கறை படியாத கரத்தோடு வருவீர்கள். ஆணியில் தொங்கும் உங்கள் சட்டைப் பையே வீட்டு வங்கி. அது குண்டாயிருந்தால் கொண்டாட்டம், அது ஒட்டிப் போயிருந்தால் கலக்கம். இருந்தாலும் சந்தோக்ஷத்துக்குப் பஞ்சம் வராமல் பார்த்துக் கொண்ட குடும்பத் தலைவன் நீங்கள்.
ெ

"பக்கத்து வீட்டைப் பார்த்து நீளம் உயரம் தாண்டக் கூடாது" என்று. போதித்தவர் நீங்கள். அம்மாவைப் புகழும்போது சத்தக் குரல், அம்மாவைத் திட்டும் போது சன்னக் குரல் என்ற புருக்ஷ இங்கிதம் தெரிந்தவர் நீங்கள். "உன் அம்மாவை நான் கோபித்தால் பபாசம், என் மனைவியை நீ கோபித்தால் மோசம்" என்று கட்டியவளை விட்டுக் கொடுக்காத கண்ணியக் கணவன் நீங்கள். நான் தோற்றபோது வாடிவிடுவேனோ என்று வாஞ்சையோடு அணைத்துக் கொண்டீர்கள். அப்பா.... அப்பா ... என்று உங்களை வியந்து கேட்க ஆயிரம் கேள்விகள். இதோ காலம் வெளுத்துப் போட்ட நரை முடியோடு, வாழ்க்கை கசக்கிப் போட்ட முகச் சுருக்கங்களோடு முதுமையின் அரவணைப்பில் பிறந்த குழந்தை போல் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அன்பாகவே வாழ்ந்து காட்டிய உங்களுக்கு இந்த வாழ்த்து.